1975 நவம்பர் 12]

தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் அனுமதி.

* 327 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975-76 கல்வி ஆண்டில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் அதிக அளவில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) எழவில்லை.

புதிய மீன்பிடி படகுகள்.

* 328 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாடு மீனளவளர்ச்சிக் கழக சார்பில் மீன்பிடி படகுகள் வாங்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, ஏற்கனவே மீனளத் துறையின் சார்பில் மீன்பிடி படகுகளை வாங்கத் திட்டம் தீட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது. அப்படி ஆலோசனையில் இருந்தது தள்ளிப் போடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, அரசாங்கம் இதற்கு முன்பு இரண்டு மீன்பிடி டிராலர் வாங்க வேண்டுமென்று தீர்மானித்து, இத்தாலி நாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. ஒப்பந்தம் செய்துகொண்ட பிறகு அதை உடனே நிறைவேற்ற முடியாமல், இத்தாலி நாட்டிலிருந்து அந்த நிறுவனம் கூடுதல் பணத்தைக் கேட்டதால், பிறகு வேறு ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டு, தற்போது